ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2154/9 - 2019 දෙසැම්බර් මස 18 වැනි බදදා - 2019.12.18

*2154/9 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: DS/VN/LA.A/MSJ-232.

காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் குறிப்பு இல.: 4-3/5/2018/HA/04.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**நோக்கம்** : மாவிட்டபுரம் தெற்கு கிராம அலுவலர் (J/232) பிரிவிற்கான கிராம அலுவலகக் கட்டிடம் நிர்மாணிப்பதற்காக (கிராமச் செயலகம்) காணியை எடுத்துக்கொள்ளல்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

வட மாகாணத்தில், யாழ்ப்பாண மாவட்டத்தில், வலிகாமம் வடக்கு, தெல்லிப்பளை பிரதேச செயலகப் பிரிவில், மாவிட்டபுரம் தெற்கு (J/232) கிராம அலுவலர் பிரிவில், மாவிட்டபுரம் கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவை அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இல. பிபியா 2936 கொண்டதுமான, 0.0180 ஹெக்டாயர் விஸ்தீரணமுடைய காணித் துண்டு இல. 01 இன் விபரம் :

*01.* **துண்டு இல.** *01*

காணியின் பெயர் : புளியடி; விபரம் : தோட்டக் காணியில் ஒரு நிரந்தரக் கட்டிடம், ஒரு குழி மற்றும் ஒரு குழாய் கிணறு; உரிமை கோருபவர் : செல்வராஜா அஜித்குமார்; விஸ்தீரணம் : 0.0180 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 10 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு தெல்லிப்பளை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ச. சிவஸ்ரீ,
பிரதேச செயலாளர்,
தெல்லிப்பளை.

பிரதேச செயலகம்,
வலிகாமம் வடக்கு,
தெல்லிப்பளை,
2019, திசெம்பர் 09.

*12 - 892*



இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

பிரதேச செயலாளர் குறிப்பு இல.: DIVPANN/LND/ACDEP/1/4/15.

2019, மே மாதம் 10 ஆந் திகதிய 2122/55 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மேற்குறித்த அறிவித்தலில் காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் குறிப்பு இல. 4-3/2017/LO/283 எனக் குறிப்பிடப்பட்டிருப்பினும் அது 4-3/4/2017/LO/54 எனத் திருத்தப்படுகின்றது.

ஆர். எம். எஸ். விக்ரமரத்ன பண்டார,
பிரதேச செயலாளர்,
பன்னல.

பிரதேச செயலகம்,
பன்னல.

12 - 893